**தமன்கடுவ பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 சனவரி 01 முதல் 2018 மார்ச் 19 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2019 சனவரி 21 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 16 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தமன்கடுவ பிரதேச சபையின் 2018 மார்ச் 19 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் 2018 சனவரி 01 முதல் 2018 மார்ச் 19 வரையான காலப்பகுதிக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் 19 உருப்படிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பிடப்பட்டு பதிவேட்டிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | 2016 ஆம் ஆண்டின் போது ஏலமிடப்பட்ட காணியில் பிரதேச சபைக்கு சட்டரீதியான உரித்துறுதியின் மூலம் ஒப்படைக்கப்பட்ட 02 ரூட் 9.54 பேர்ச் பரப்பளவான காணியின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் சனவரி 12 மற்றும் பெப்ரவரி 19 ஆந் திகதிகளில் முறையே கொள்வனவு செய்யப்பட்ட உருக்கு அலுமாரி 01 மற்றும் 06 கணனி மேசைகளின் பெறுமதியான ரூபா 51,979 தொகை இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகிய இரு வகையின் கீழும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திர உபகரணங்களிலிருந்து அகற்றப்பட வேண்டும். | இயந்திர உபகரண கணக்கிலிருந்து அகற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த பிளாஸ்திக்கு பேலர் இயந்திரம் ஒன்றின் பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் பதிவேட்டிற்குட்படுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (v) | உள்ளூராட்சி திணைக்களத்தினூடாக 2017 யூன் மாதம் வழங்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 9,939,115 தொகையான 3 உபகரணங்களின் பெறுமதிகள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் பதிவேட்டிற்குட்படுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (vi) | 2017 ஆம் ஆண்டின் இறுதி 03 மாதங்களுக்குரிய நீதிமன்ற தண்டப்பணங்களை பட்டியலிடடல் ரூபா 3,326,150 தொகை 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப நிலுவை நீதிமன்ற தண்டப்பண வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப மீதியாக கொள்ளப்படல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (vii) | சபையின் பொறுப்பிலுள்ள ரூபா 64,180 ஆன ஊழியர் பிணை அங்கீகாரமின்றிஅ அந்த கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | ஊழியர் பிணை கணக்கு வைக்கப்பட வேண்டும். | எஞ்சிய கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துவேன் என தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | 2018 மமார்ச் 19 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வியாபார நிறுவனங்கள் மற்றும் கடை வாடகை வருமானமானது ரூபா 69,791 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | எதிர்வரும் கணக்குகளில் திருத்தப்படும் என அறிவிக்கின்றேன். |
| (ix) | 2018 மார்ச் 19 ஆந் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட வியாபார நிலைய மற்றும் கடை வாடகை வருமானம் ரூபா 102,332 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | எதிர்வரும் கணக்குகளில் திருத்தப்படும் என அறிவிக்கின்றேன். |
| (x) | 2018 சனவரி 01 முதல் 2018 மார்ச் 19 வரையான காலப்பகுதிக்குரிய நிலுவை நீர்க் கட்டண வருமானம் ரூபா 39,828 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். |
| (xi) | 2018 மார்ச் 19 ஆந் திகதியில் உள்ளபடியான பெறுமதி ரூபா 48,222 ஆன ஆயர்வேத நடமாடும் பிணியாய்வு கையிருப்பு மீதியினை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சிய இருப்பு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | சரியாக ஆயர்வேத நடமாடும் பிணியாய்வு கையிருப்பு மீதியினை கணக்கு வைப்பதற்கு நடடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். |
| (xii) | 2018 சனவரி முதல் மார்ச் 19 வரையான காலப்பகுதிக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் அந்த காலப்பகுதிக்குரியதாக பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானங்கள் இணங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். |
| (xiii) | சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதுடன் தொடர்புடையதாக 2018.03.19 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 189,532 | சரியான மீதிகள் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | ஆன முற்பண வருமானமொன்று காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 3,436,393 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 மார்ச் 19 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களுடன சமர்ப்பிக்கப்பட்டிருந்த சொத்துக்களின் பட்டோலைகளின் பிரகாரம் நவநகர நூலகம் மற்றும் காணியின் பெறுமதி ரூபா 1,014,258 ஆன போதிலும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் மீதியானது ரூபா 820,000 ஆனமையால் ரூபா 194,258 ஆன வேறுபாடொன்று நிலவியது. | சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியதுடன், நிலையான சொத்துக்கள் பதிவேடு சரியான நாளதுவரையாக்கப் பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2018 மார்ச் 19 ஆந் திகதியில் உள்ளடியான வீதவரி பதிவேடுகளின் பிரகாரம் வீதவரி நிலுவையானது ரூபா 13,220,791 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதியானது ரூபா 14,368,750 ஆனமையால் ரூபா 1,147,959 ஆன இணக்கமின்மையொன்று காணப்பட்டது. | சரியான மீதிகள் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேன். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

**தகவல்களை கணக்காய்விற்கு முன்வைக்காமை**

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 12 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 644,135,459 கூட்டுப் பெறுமதிக்கான சான்றுகள் முன்வைக்கப்பட்டிராமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | பெறுமதிகளை உறுதிப்படுத்தி சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது எழுத்து மூல சான்றுகளுடன் கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக விதிக் கோவை | | | |
| (i) | 180 – 184 வரையான விதி | பணம் அல்லது களஞ்சியத்திற்கு பொறுப்பாக செயற்படும் 06 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புகளை சம்ளத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 203 மற்றும் 204 ஆம் விதி | சபையின் ஆதனங்கள் தொடர்பில் முழுமையான மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முழுமையான மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் சொத்துக்களின் மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 217 மற்றும் 218 ஆம் விதி | சபைக்குரிய அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் பீ.எஸ்.46 மாதிரியின் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | பீ.எஸ். 46 பதிவேட்டில் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் பீ.எஸ்.46 மாதிரியின் பிரகாரம் பதிவேடொன்றினை பேண நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **(ஈ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 571 மற்றும் 572 | 2 முதல் 5 வருடங்கள் வரையான காலம் கடந்துள்ள ரூபா 431,300 பெறுமதியான பொது வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நி.பி. பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் சொத்துக்களை செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **(இ)** | **சுற்றறிக்கை மற்றும் கடிதங்கள்** | | | |
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏ/ஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பிலான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | | கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பிலான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.5 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டு வரப்படும் அறவிடப்பட வேண்டிய பணிகளுக்காக ரூபா 2,699,837 ஆன தொகையை | இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | மீதிகளை அறவிடுதலுடன் தொடர்புடைய இனங்காணக்கூடிய எழுத்து மூல சான்றுகள் இல்லாதிருந்தமையால் |

| | | |
|---|---|---|
| அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எதிர்வரும் காலங்களில் அங்கீகாரத்தின் பின்னர் கணக்குகளிலிருந்து அகற்றுவதங்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**1.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,715,018 தொகையான நிலுவைச் சம்பள மீளளிப்பு தொகை உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமின்றி நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | எழுத்துமூல அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும். | அங்கீகாரத்தினை உள்ளூராட்சி திணைக்களத்திடம் கோரியுள்ளதுடன், கிடைத்த பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கின்றேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 சனவரி 01 அந் திகதி முதல் 2018 மார்ச் 19 ஆந் திகதி வரையிலும் சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,970,324 ஆக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காணி மற்றும் கட்டிடங்களின் உருப்படி 22 இன் மற்றும் 09 மோட்டார் வாகனங்கள் மற்றும் தள்ளு வண்டிகளின் பெறுமதி ரூபா 75,920,613 தொகை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | 2018 மார்ச் 19 ஆந் திகதியளவில் 01 முதல் 07 வருடங்கள் வரையான காலமாக அறவிடப்படாது காணப்படும் ஊழியர் கடன் நிலுவை மீதி ரூபா 166,265 ஆன தொகை உரிய உத்தியோகத்தர்களிடம் அல்லது பிணையாளர்களிடம் அறவிடுவதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய உத்தியோகத்தர்களிடம் அல்லது பிணையாளர்களிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சுமார் 05 வருட காலமாக செயலற்றுக் காணப்படும் 03 வங்கிக் கணக்குகளின் ரூபா 1,034,995 கூட்டுத்தொகையின் ஆக்கபூர்வமான பயன்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். | செயலற்ற நிலையில் காணப்படும் வங்கிக் கணக்குகளை மூடி விடுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |

## 3.3 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 4,830,000 பெறுமதியான Magic BIO KUN-TECH-500-A1 இயந்திரம் 2019 சனவரி 11 ந் திகதியளவில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். | இந்த இயந்திரம் ஈட்டும் வருமானத்தினை விட செலவினம் அதிகமானமையின் அடிப்படையில தற்காலிகமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தமன்கடுவ பிரதேச சபையின் அதிகாரப்பிரதேசத்தினுள் 06 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தலைவர் மற்றும் கேஸ் இன்ஜினியர்ஸ் பிரைவட் லிமிடட் நிறுவனம் ஆகியவற்றுக்கிடையே 2010 | விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை | எதிர்வரும் காலங்களில பதில வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகஸ்ட் 02 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட ரூபா 53,107,118 பெறுமதியான உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணத் தொகையில் ரூபா 6,546,030 ஆன தொகை 2013 யூன் 28 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் தீர்ப்பதற்கான இயலுமை காணப்பட்ட போதிலும், சபையின் மற்றும் உரிய வங்கியின் தாமதத்தின் காரணமாக அறவிடுவதற்கு தவறியிருந்தது. இது தொடர்பில் வங்கிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், நி.பி. 104 இன் கீழ் விசாரணைகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாதிருக்க நடைமுறைப்படுத்த வேண்டிய உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டியதுடன், மீண்டும் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதிருப்பதற்காக உரிய கட்டுப்பாட்டு நடைமுறைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். | |
| (ஆ) | மேற்படி (அ) பந்தியின் கீழான தோல்வியடைந்த செயற்திட்டத்திற்காக மதியுரை சேவைகளை வழங்கிய மதியுரை நிறுவனத்துடன் இணைந்து பொலன்னறுவை வியாபாரக் கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக ரூபா 16,500,000 பெறுமதியான உடன்படிக்கையொன்று 2012 ஒக்தோபர் 10 ஆந் திகதி ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்த மதியுரை நிறுவனமும் உடன்படிக்கையின் பிரகாரம் சேவையினை வழங்காது செயற்திட்டத்திலிருந்து விலகியிருந்ததுடன், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை மீறப்பட்டமை தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | பொலன்னறுவை வியாபார கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மின்சாரம், கதவு யன்னல்கள் உட்பட அனைத்து திட்ட வரைபுகளையும் | சட்டங்கள் மற்றும் விதிகளை மீறியமை தொடர்பில் உரிய நடவடிக்கை | எதிர்வரும் காலங்களில் பதில் வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | |
|---|---|
| பெற்றுக்கொள்ளாது முதற் கட்டத்திற்காக உரிய மதியுரைக் கட்டணமான 30 சதவீதமான தொகையை விஞ்சி கட்டணத்தில 40 சதவீதமான ரூபா 6,600,000 தொகை 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது மதியுரை நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வு அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க முடியாதுள்ளது. |